எம்.சி.ஓ.பி எண்: 1502/2022 தேதி: 20.03.2025

மசா. : 1

பெயர் : ஜாஹிர் உசேன்

த/பெ. : முகமது காசிம்

வயது : 52

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தொியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 6 மட்டும் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இருசக்கரவாகனம் ஓட்டிச்செல்லும்போது எதிரே வந்த வாகனம் மோதி விபத்து நடந்தது என்றால் சரி. சாலையின் நடுவில் விபத்து நடந்தது என்றால் இடது பக்கம் நடந்தது. அந்த சங்கசனா எ்னறால் அது திரும்பும் இடம். நான்தான் எதிரே வரும் வாகனத்தை கவனிக்கமால் வேகமாக வந்து விபத்தை ஏற்டுத்தினேன் என்றால் சரியல்ல.விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 11.06.2023 க்கு பிறகு தொடர்சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரி. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டது என்றாலும் எனக்கு ஊனமோ இயலாமையோ இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பில்கள் ரசீதுடன் தாக்கல் செய்யதா காரணத்தால் அவை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல எ்னறால் சரியல்ல. மசாஆ 13 ஆவணத்தின் படி விபத்து சமயத்தில் முதலாம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் ஓட்டுநர் உாிமம் காலாவதி ஆகிவிட்டது என்றால் தொியாது. அந்த ஆவணத்தில் அவ்வாறுதான் காணப்படுகிறது. முதலாம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு தகுதி சான்று காலவாதி ஆகிவிட்டது என்றால் தொியாது. முதலாம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு தகுதி சான்று இல்லாத காரணத்தாலும் ஓட்டுநர் உாிமம் காலாவதி ஆன காரணத்தாலும் 2 ம்

எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் கூறிய விவரங்களுக்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தொழில் வருமானத்திற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வருமானம் ஈட்டும் திறன் குறைந்துள்ளது என்பதை நிறுபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.